Registrar of News Paper for India Regn. No. 15261/2005 (R.Dis no.1834/04) Date of Publication : 1st Week of Every Month 4 Pages 


# CVPA NEWS

A Monthly Newspaper (Tamil & English) for Video & Photographic Professionals

AN OFFICIAL NEWS MAGAZINE FROM CHENNAI VIDEO & PHOTOGRAPHER'S ASSOCIATION

Film - 18 December 2022 Click - 09 Re. 1





சங்கத்தில் புதியதாக உறுப்பினராக இணைபவர்களுக்கும், ரினிவல் செய்பவர்களுக்கும் சங்கத்தின் சார்பாக QR கோடுடன் கூடிய அழகிய அடையாள அட்டை, ரோப்புடன் வழங்கப்படுகிறது. உறுப்பினர்கள் அனைவரும் இதை பெற்று பயன்பெறுமாறு கேட்டுக்கொள்கிறோம் - CVPA.

## நமது சங்கத்தின் சார்பாக வழங்கப்படும் 2023-ம் ஆண்டிற்கான டைரி தயாராகிறது

அன்பார்ந்த சங்க உறுப்பினர்கள் அனைவருக்கும் வணக்கம்.

கடந்த மாதம் வெளியான நமது சங்க பத்திரிகையில் சங்க தலைவர் செல். செல்வம் அவர்களின்தலைமையிலான நிர்வாகத்தின் மூன்று மாத செயல்பாடுகள் குறித்து, உறுப்பினர்களாகிய நீங்கள் அனைவரும் தெளிவாக தெரிந்து கொள்வதற்காகவே, எங்களின் செயல்பாடுகள் அனைத்தும் உங்களுக்காக நினைவூட்டப்பட்டன. அதை ஒரு சாதனையாக எந்த ஒரு இடத்திலும் நாம் குறிப்பிடவில்லை. அந்த நியூஸை படித்த சில சங்க உறுப்பினர்கள் பல்வேறு ஆலோச னைகளை நமக்கு வழங்கி வருகின்றனர். அவர்களுக்கு எனது நெஞ்சார்ந்த நன்றியினை தெரிவித்துக் கொள்கிறேன். மேலும் சில ஆயுட்கால உறுப்பினர்கள், இன்சூரன்ஸ் தொகையை செலுத்த தயாராக இருப்பதாக கூறி இருக்கின்றனர். சங்க உறுப்பினர்கள் பயன் பெறும் வகையில் உள்ள CVPA அறக்கட்டளையின் பதிவுகளை விரைந்து முடித்து, செயல்படுத்துமாறு வேண்டுகோளும் விடுத்துள்ளனர். எனினும், நமது சங்க நிர்வாகிகள் இந்த ஆண்டின் இறுதி கட்ட பணிகளை விரைந்து முடிக்கும் வகையில் செயல்பட்டு வருகின்றனர்.

ஒவ்வொரு ஆண்டும் சங்க உறுப்பினர் களுக்கு வழங்கப்படும் டைரி இந்த ஆண்டு விளம்பரதாரர்கள் தந்த முழு ஒத்துழைப்பின் காரணமாக மிக விரைவாக முடியும் தருவாயில் உள்ளது. புத்தாண்டுக்கு முன்னதாகவே டைரி அனைவருக்கும் கிடைக்கும் வகையில் விநியோகித்து விட முயற்சிகளை மேற்கொண்டு வருகிறோம். ஜனவரி 31க்கு பிறகு டைரி வழங்குவது கண்டிப்பாக நிறுத்தப்படும். எனவே சங்க உறுப்பினர்கள் அந்தந்த பகுதியை சார்ந்த துணைத் தலைவர்கள் இணைச்செயலாளர்கள் மற்றும் பகுதி செயலாளர் மூலமாக டைரியை பெற்றுக் கொள்ளுமாறு கேட்டுக் கொள்கிறோம் .

கடந்த மாதம் 19ம் தேதி சென்னை பாவுசார் திருமண மண்டபத்தில் புதிய பானாசோனிக் AGX2 மற்றும் AGX20 ஆகிய 4K கேமிராக்களின் டெமோ காட்சிப்படுத்தப்பட்டது. பிரதிக்ஷா கேமிரா டீலர் சார்பாக நடைபெற்ற இந்த டெமோவில் சங்க நிர்வாகிகள் செயற்குழு உறுப்பினர்கள் கலந்து கொண்டார்கள். வரும் டிசம்பர் 21ஆம் தேதி சங்க உறுப்பினர்களுக்காக மூன்று விதமான ஓர்க் ஷாப்பை நடத்த உள்ளோம். சங்க உறுப்பினர்களுக்கு இதில் எந்த ஓர்க் ஷாப் பிடிக்குமோ, அவர்கள் அந்த நேரத்தில் நடைபெறும் பயிற்சி வகுப்பில் கலந்து கொள்ளும் வகையில் ஏற்பாடு செய்யப்பட்டுள்ளது. இது தவிர, CVPA சங்க அமைப்பில் நான்கு பகுதிகளாக பிரிக்கப்பட்டுள்ள தென் சென்னை எஸ்1 , தென் சென்னை எஸ்2 , மத்திய சென்னை, வடசென்னை, ஆகிய பகுதிகளில் பிரபலமான மென்டார்களைக் (பயிற்றுநர்கள்) கொண்டு பயிற்சி வகுப்பு ஏற்பாடு செய்ய உள்ளோம். இந்த வகுப்புகள் நடைபெறும் இடங்களை நமது சங்க நிர்வாகிகள் தேர்வு செய்து வருகின்றனர். இந்த பணி முடிவடைந்ததும் ஓர்க் ஷாப் நடத்தும் தேதி முறையாக அறிவிக்கப்படும்.

நமது சங்கத்தில் முன்னாள் பகுதி செயலாளர் மூத்த உறுப்பினர்களாக இருந்து வந்த சைதாப்பேட்டையை சேர்ந்த சுரேஷ் அவர்களும், அயனாவரம் பகுதி உறுப்பினர் தேவி டிஜிட்டல் கலர் லேப் நடராஜ் அவர்களும், கடந்த மாதம் உயிர்நீத்தார். இந்த குடும்பங்களுக்கு நமது சங்கத்தின் சார்பாக வழங்கப்படும் ஈம சடங்கு தொகை முறையாக வழங்கப்பட்டுள்ளன.

சமீபத்தில் உடல் நலம் பாதிக்கப்பட்டு தீவிர சிகிச்சை மேற்கொண்டு வரும் மந்தைவெளி பாபு அவர்களுக்கு உதவிடும் நோக்கத்தில், CVPA சார்பாகவும், தென் சென்னை எஸ்2 சார்பாகவும் மருத்துவ உதவி கோரப்பட்டது. இதற்கு சங்க நிர்வாகிகளும், செயற்குழு உறுப்பினர்கள், மேலும் சில நண்பர்கள் கொடுத்த மருத்துவ உதவி தொகையை தென் சென்னை எஸ்2 சார்பாக ரூபாய் 38,551 வழங்கப்பட்டுள்ளது. மேலும் பல சங்க உறுப்பினர்களும் அவருக்கு உதவி செய்து வருகின்றனர். நாம் அவருக்கு கொடுத்தது சிறிய தொகை தான் என்றாலும், அவரது மருத்துவ செலவுக்கு இன்னும் பணம் தேவைப்படுகிறது. அவருக்கு உதவும் அன்பு உள்ளம் கொண்ட நண்பர்கள் அவரை நேரில் சந்தித்து உதவி செய்யலாம் என்று கேட்டுக்கொள்கிறேன்.

## மாற்றுத்திறனாளி அமைப்பின் சார்பாக தமிழக முதலமைச்சர் அவர்கள் தலைமையில் ஸ்ரீதர் மகள் சுயம்வர திருமணம் சிறப்பாக நடைபெற்றது







மாற்றுத்திறனாளி அமைப்பின் சார்பாக நடைபெற்ற சுயம்வரம் நிகழ்ச்சியில் நமது சங்கத்தின் முன்னாள் தலைவரும், நியூஸ் ஆசிரியருமான ஸ்ரீதர் அவர்களின் மகள் சுயம்வரம் நிகழ்ச்சியில் கலந்து கொண்டார். இந்த திருமணத்தை மாற்றுத்திறனாளிகள் நல அமைப்பும், சென்னை ராயப்பேட்டை, கீதா பவன் அறக்கட்டளையும் இணைந்து நடத்தியது. தமிழகம் முழுவதும் இந்த அமைப்பின் மூலமாக நடைபெற்ற சுயம்வர நிகழ்ச்சியில் 51 ஜோடிகள் தேர்ந்தெடுக்கப்பட்டனர். சென்னை ராயப்பேட்டை கீதா பவன் திருமண மண்டபத்தில் ஏற்பாடு செய்யப்பட்ட இவர்கள் திருமணத்தை **தமிழக முதலமைச்சர் மு.க.ஸ்டாலின் அவர்கள்** தலைமை ஏற்று நடத்திக் கொடுத்தார். நிகழ்ச்சியில் கலந்து கொண்ட ஜோடிகளுக்கு முதலமைச்சர் சார்பில் பரிசு பொருட்கள் வழங்கினார். மேலும் இந்நிகழ்ச்சியில் **சமூக நலத்துறை அமைச்சர் கீதா ஜீவன்** அவர்களும், **பாராளுமன்ற உறுப்பினர் திருமதிகனிமொழி**அவர்களும்கலந்துகொண்டார்கள்.அன்றுமாலைநடைபெற்றதிருமணவரவேற்புநிகழ்ச்சியில்மாநிலசங்கநிர்வாகிகளும்,பிறமாவட்ட சங்க நிர்வாகிகளும், CVPAன் இந்நாள் நிர்வாகிகள் செயற்குழு உறுப்பினர்கள், மற்றும் முன்னாள் நிர்வாகிகள் செயற்குழு உறுப்பினர்கள் என ஏராளமான புகைப்படக் கலைஞர்கள் திருமண வரவேற்பு நிகழ்ச்சியில் கலந்து கொண்டு மணமக்களை வாழ்த்தினார்கள்.

## CVPA சார்பாக மந்தைவெளி பாபுவுக்கு மருத்துவ உதவி



உடல் நலம் பாதிக்கப்பட்டு தீவிரமாக சிகிச்சை மேற்கொண்டு வரும் நமது சங்க உறுப்பினர் மந்தைவெளி மூ.பாபு அவர்களுக்கு தென் சென்னை எஸ்–2 பகுதியின் சார்பாக மருத்துவ உதவி கோரப்பட்டது. சங்க நிர்வாகிகள் மற்றும் செயற்குழு உறுப்பினர்கள் மேலும் பல நண்பர்கள் கொடுத்த தொகையுடன் சேர்த்து மொத்தம் 38,551 ரூபாய் மந்தைவெளி மூ. பாபுவிடம் வழங்கப்பட்டது. உதவிய அனைத்து சங்க உறுப்பினர்களுக்கும் பாபு அவர்கள் நன்றி தெரிவித்தார்.

## மடிப்பாக்கம் பகுதியில் சிறப்பாக நடைபெற்ற நிகான் ஒர்க் ஷாப்






மடிப்பாக்கம் பகுதி உள்ளடக்கிய ஆலந்தூர், நங்கநல்லூர், புழுதிவாக்கம், மூவரசம்பேட்டை, கீழ்கட்டளை, நன்மங்கலம் மற்றும் கோவிலம்பாக்கம் ஏரியாவில் உள்ள நமது சங்க உறுப்பினர்கள் பயன் பெறும் வகையில் , சென்னை, கீழ்கட்டளை விஜயலட்சுமி மினி மஹாலில், நிகான் ஒர்க் ஷாப்பை மடிப்பாக்கம் பகுதி செயலாளர் விஜயராஜா அவர்கள் ஏற்பாடு செய்திருந்தார். CVPA தலைவர் செல் செல்வம் மற்றும் செயலாளர் DM. பிரேம்குமார் ஆகியோர் முன்னிலையில் இந்த ஒர்க் ஷாப் நடைபெற்றது. மேலும் நமது சங்க நிர்வாகிகளான பொருளாளர் ஜெயபால் அவர்களும், பீஆர்ஓ ரவிக்குமார் அவர்களும், தென் சென்னை எஸ்2 துணைத் தலைவர் ஜெயக்குமார் அவர்களும், இணைச் செயலாளர் சக்தி அவர்களும், கலந்து கொண்டார்கள். மடிப்பாக்கம் பகுதியில் மேலே குறிப்பிட்ட ஏரியாவை சேர்ந்த ஏராளமான சங்க உறுப்பினர்கள் இந்த ஒர்க் ஷாப்பில் கலந்து கொண்டு பயன் பெற்றார்கள். நிகழ்ச்சியின் சிறப்பு அம்சமாக 38 சங்க உறுப்பினர்களுக்கு இந்தியன் போஸ்டல் விபத்து காப்பீடு திட்டம் செய்யப்பட்டது. இந்நிகழ்ச்சியின் ஒருங்கிணைப்பாளரான மடிப்பாக்கம் பகுதி செயலாளர் விஜயராஜா அவர்கள் அனைவரையும் வரவேற்றார்.



நமது சங்க உறுப்பினர் மந்தைவெளி திரு.மூ.பாபு அவர்களின் மருத்துவ செலவுக்காக சங்க உறுப்பினர்கள் கேட்டுக் கொண்டதற்கு இணங்க, மந்தைவெளி பகுதியை சேர்ந்த திரு.லூயிஸ் அவர்கள், லயன்ஸ் கிளப் ஆஃப் மெட்ராஸ் ஈஸ்ட் மெடிக்கல் சென்டர் சார்பில் 10,000 ரூபாய் உதவித்தொகை பெற்று தந்தார். அதை நமது சங்கத் தலைவர் செல். செல்வம் முன்னிலையில், செயற்குழு உறுப்பினர்கள், பாபுவிடம் ஒப்படைத்தனர். இதற்காக லூயிஸ் அவர்களுக்கு மனமார்ந்த நன்றி தெரிவித்தனர்.

## அறிவிப்பு

*இந்த ஆண்டிற்கான டிசம்பர் மாதத்தின் கடைசி ரெனிவல் சங்கத்தில் நடைபெற்றுக் கொண்டிருக்கிறது. ரெனிவல் முடிந்த சங்க உறுப்பினர்கள் தங்கள் அடையாள அட்டையை புதுப்பித்துக் கொள்ளுமாறு கேட்டுக் கொள்ளப்படுகிறார்கள். சங்க உறுப்பினர்கள் நேரடியாகவோ அல்லது ஆன்லைன் மூலமாகவோ உங்கள் அடையாள அட்டையை புதுப்பித்துக் கொள்ளலாம். மேலும் விவரங்களுக்கு சங்க நிர்வாகிகளை அல்லது செயற்குழு உறுப்பினர்களை தொடர்பு கொண்டு கேட்டுக் கொள்ளலாம்.*

இப்படிக்கு

**செல். செல்வம்**
CVPA *தலைவர்*

**DM. பிரேம்குமார்**
CVPA *செயலாளர்*

## காலஞ்சென்ற பிரகாஷ் அவர்களின் மகள் படிப்புக்கு உதவி


வடசென்னை வண்ணாரப்பேட்டை பகுதியை சேர்ந்த காலம் சென்ற நமது சங்க உறுப்பினர் திருமிகு. பிரகாஷ் அவர்களின் மகள் படிப்பு செலவுக்கு உதவி செய்யுமாறு அவருடைய குடும்பத்தினர் CVPA நிர்வாகத்திற்கு கோரிக்கை வைத்தனர். அதன்அடிப்படையில்நமது சங்கநிர்வாகிகள் கேட்டுக் கொண்டதன் பேரில், சங்கத்தின் முன்னாள் துணைத் தலைவரும் நமது சங்க தேர்தல் அதிகமான திரு.எழில்ஆனந்த் அவர்கள் எடுத்த சீரிய முயற்சியின் காரணமாக அந்த மாணவி படிக்கும் பள்ளிக்கூட நிர்வாகத்திடம் முறையாக பேசி கல்வி கட்டணத்தில் சலுகை பெற்று கொடுத்தார். ஆனால் அந்த குடும்பம் அதையும் கட்ட முடியாத சூழ்நிலையில் இருந்தது. இது குறித்து புரசைவாக்கம் பகுதி செயலாளர் எஸ்கே. வீடியோ சீனு அவர்களின் கவனத்திற்கு கொண்டு செல்லப்பட்டது. அவர் இந்த ஆண்டுக்கான கல்வி கட்டணம் முழுவதையும் அவரே ஏற்றுக்கொண்டார். மறைந்த பிரகாஷ் குடும்பத்தினர் சங்க நிர்வாகிகளுக்கும், எஸ்கே. வீடியோ சீனு அவர்களுக்கும் நன்றி தெரிவித்தனர்.

## வருந்துகிறோம்



சைதாப்பேட்டை முன்னாள் பகுதிச் செயலாளர் நமது சங்கத்தின் மூத்த உறுப்பினர் **ஜி.சுரேஷ்** அவர்கள் கடந்த மாதம் மாரடைப்பின் காரணமாக இயற்கை எய்தினார். நமது சங்கம் சார்பாக சங்க நிர்வாகிகள் அனைவரும் இறுதி அஞ்சலி நிகழ்ச்சியில் கலந்து கொண்டு அஞ்சலி செலுத்தினார்கள். பின்னர் சங்கம் சார்பாக உறுப்பினர்களுக்கு வழங்கப்படும் ஈமச்சடங்கு தொகை 20 ஆயிரம் ரூபாயை அவருடைய குடும்ப வாரிசுதாரர்களிடம் வழங்கினார்கள். அன்னாரை பிரிந்து வாடும் அவர்தம் குடும்பத்திற்கு CVPA சார்பாக ஆழ்ந்த இரங்கலை தெரிவித்துக் கொள்கிறோம்.

## வருந்துகிறோம்



அயனாவரம் பகுதியை சேர்ந்த நமது சங்க உறுப்பினர் **தேவி டிஜிட்டல் கலர் லேப் நடராஜன்** அவர்கள் கடந்த மாதம் உடல் நல குறைவின் காரணமாக இயற்கை எய்தினார். அண்ணாருடைய இறுதி அஞ்சலி நிகழ்ச்சியில் கலந்து கொண்டு அஞ்சலி செலுத்திய சங்க நிர்வாகிகள் பின்னர் சங்கம் சார்பாக சங்க உறுப்பினர்களுக்கு வழங்கப்படும் ஈமச்சடங்கு தொகை ரூபாய் 10 ஆயிரத்தை அவருடைய குடும்ப வாரிசுதாரர்களிடம் வழங்கினார்கள். அண்ணாரைப் பிரிந்து வாடும் அவர்தம் குடும்பத்திற்கு நமது சங்கம் சார்பாக ஆழ்ந்த இரங்கலை தெரிவித்துக் கொள்கிறோம்.

# சென்னை வீடியோ மற்றும் புகைப்பட கலைஞர்கள் சங்கம்

Regd No. : 446/96
எண்.48, பூரா சாஹிப் தெரு, மவுண்ட் ரோடு, சென்னை-600002.
✆ : 2860 7821, Cell : 78240 34734
E-mail : cvpa9602@gmail.com Website : www.cvpa.in

அனைவருக்கும் வணக்கம் வருகின்ற 21-12-2022 அன்று புதிய கேமராக்களின் அறிமுகம் அதன் சிறப்பு அம்சங்கள் செயல் திறன் பற்றிய பயிற்சி வகுப்பு நடைபெறுகிறது மூன்று கட்டங்களாக பிரிக்கப்பட்டுள்ளது.




வகுப்பு-1 PANASONIC CAMERA காலை:10.00-12.00 மணிவரை நடைபெறும்



வகுப்பு-2 DGFlick Album Express back நண்பகல்:12.30-01.30 மணிவரை நடைபெறும்

போட்டோஷாப் உதவி இல்லாமல் ஆல்பம் வடிவமைக்க தேவையான அனைத்து வசதிகளுடன் கூடிய அதிவிரைவு மென்பொருள்




வகுப்பு-3 SONY CAMERA மதியம்:02.00-04.00 மணிவரை நடைபெறும்



விருப்பமுள்ள உறுப்பினர்கள் எந்த வகுப்பில் கலந்து கொள்ள விரும்புகிறீர்களோ அவர்கள் தங்களின் பெயர்களை அந்தந்த மாவட்ட துணைத் தலைவர் இணை செயலாளரிடம் அவர்களிடம் தெரிவிக்கவும்
குறிப்பு: ஒரு வகுப்பிற்கு 100 நபர்கள் மட்டுமே அனுமதி - மதிய உணவு இல்லை

DATE -21.12.2022
PLACE - SVS CLUB
Anna Salai, Chennai-600002.

## CVPA நிர்வாகிகள்

| தலைவர் | செயலாளர் | பொருளாளர் | PRO |
|---|---|---|---|
| S.செல் செல்வம் | D.M. பிரேம்குமார் | K. ஜெயபால் | N. ரவிக்குமார் |
| 9941867744 | 98840 02779 | 9381090329 | 9841272071 |

**துணைத் தலைவர்கள்**

| வடசென்னை | மத்திய சென்னை | தென் சென்னை -1 | தென் சென்னை -2 |
|---|---|---|---|
| A. கௌஸ்பாஷா | M. வேல்முருகன் | R. சீனிவாசன் | K. ஜெயக்குமார் |
| 9840121525 | 9884184548 | 9840127491 | 9840097961 |

**இணைச் செயலாளர்கள்**

| மத்திய சென்னை | வடசென்னை | தென் சென்னை -1 | தென் சென்னை -2 |
|---|---|---|---|
| R.தனக்கோட்டி | P. பிரபாகரன் | T. செந்தில்குமார் | E. சக்தி |
| 9841327387 | 9282117785 | 8144655506 | 9094880066 |


# Foto Land

No.37, Lakeview Rd, Adambakkam, Chennai, 600088.

SPECIAL CHRISTMAS OFFER

**Applicable For CVPA Members

Bill payment Above 5000/- get 12X18 Lamation & Calander or 24x16 Lamation Free

Bill payment Above 3000/- get 12X18 Lamation or Calander Free

Bill payment 2000/- get 12X8 Lamation Free

Note: Full Payment Should be paid on time of booking and only This offer Available


## ஆதம்பாக்கம் பகுதிக்கு புதிய பகுதி செயலாளர்



ஆதம்பாக்கம் பகுதி செயலாளர் T.சுரேஷ்

CVPA நிர்வாக குழு – செயற்குழு உறுப்பினர்கள் அனைவருக்கும் வணக்கம் ஆதம்பாக்கம் பகுதி செயலாளர் பதவிக்கு T.சுரேஷ் – வேத நாராயணன் இருவர் விருப்ப மனு அளித்தனர் அதனால் 08.11.2022 அன்று நடைபெற்ற செயற்குழு கூட்டத்தில் தேர்தல் நடத்தலாம் என்று தீர்மானம் நிறைவேற்றப்பட்டது அதன் அடிப்படையில் தேர்தல் நாள் 26.11.2022 மற்றும் இடம் முடிவு செய்யப்பட்டு அதற்கு உண்டான பணிகளை தொடங்குவதற்கு 21-11-2022 அன்று மாலை சங்க அலுவலகத்தில் தேர்தல் கூட்டம் நடைபெற ஏற்பாடு செய்யப்பட்டது அதற்குள் விருப்ப மனு அளித்த இருவரில் ஒருவர் வேத நாராயணன் அவர்கள் தனது விருப்ப மனுவை திரும்பப் பெற்றுக் கொள்வதாக கடிதம் அளித்தார் ஆகையால் ஆதம்பாக்கம் பகுதிக்கு தேர்தல் ரத்து செய்யப்பட்டது திருT.சுரேஷ் அவர்கள் ஆதம்பாக்கம் பகுதி செயலாளராக நியமிக்கப்படுகிறார் என்பதனை தெரிவித்துக் கொள்கிறோம் T.சுரேஷ் அவர்களுக்கு வாழ்த்துக்களையும் தெரிவித்துக் கொள்கிறோம்

இப்படிக்கு
CVPA நிர்வாக குழு– செயற்குழு

## புதிய பேனாசோனிக் AG X2 கேமரா


பானாசோனிக் நிறுவனம் தற்போது அறிமுகப்படுத்தியுள்ள புதிய 4K கேமராவானது, (மாடல் எண் AGX2) நமது தொழில்முறை வீடியோ கிராஃபர்களின் கவனத்தை மிகவும் ஈர்த்து வருகிறது. இந்த கேமராவில் ஒளிப்பட கலைஞர்கள் விரும்பும் படப்பதிவுகளுக்கு ஏற்ற பயனுள்ள 15 மெகா பிக்சல்கள் கொடுக்கக்கூடிய 1.0 இன்ச் வகை சென்சார் அமைந்திருப்பதால் படத்தின் தரம் மேலோங்கி நிற்கிறது. ஆப்டிகல் லென்சைப் பொருத்தவரை 20× ஜும், 24.5எம்எம் வையிடு, 490எம்எம் டெலி என உள்ளது. பல்வேறு விதமான படப்பதிவு முறை இந்த கேமராவிற்கு மேலும் சிறப்பூட்டுகிறது. குறிப்பாக HEVC கோடாக்கானது,(LONG GOP/10 PIT 4:2:0/ MOV) 59.54 P/50P ஆகிய வீடியோ பதிவுகளை 200 Mbps என உயர் பிட்ரேட்டை சப்போர்ட் செய்கிறது. ஃபுல் ஹெச்டி பொறுத்த வரை120/100fps சூப்பர் ஸ்லோ மோஷன் எனவும், 4Kவில் ( UHD) VFR ல் 2 முதல் 60 fps வரை 10 பிட் ரேட் ரெக்கார்டிங் சப்போர்ட் செய்கிறது. இந்த கேமராவில் ஃபேஸ் ஆட்டோ போக்கஸ் இருப்பதால் துல்லியமான படப்பதிவுக்கு உதவுகிறது. UHD/ FHD ஆகிய இரண்டு முறைகளிலும் ஆப்டிகல் இமேஜ் ஸ்டெபிலைசேஷன் தவிர எலக்ட்ரானிக் இமேஜ் ஸ்டெபிலைசேஷன் அமைந்திருப்பதால் கேமரா ஹேண்ட் ஷேக்கை கண்டறிந்து சரி செய்ய உதவுகிறது. எஸ்டி கார்டில் 4:2:2 ல்10 பிட் வண்ணத்தில் பதிவு செய்யப்படுவது இந்த கேமராவில் சிறப்பம்சமாக பார்க்கப்படுகிறது. மேலும், HDR தர நிலைகளில் தொடர்புடைய HLG (ஹைபிரிட்லாக்காமா) படப்பிடிப்பு முறையுடன் பொருத்தப்பட்டுள்ளது. கூடுதலாக இது V-log ஆதரிக்கிறது. 13 (Stop) நிறுத்தங்களை வழங்குகிறது. V-log கேமராவுடன் இணைக்கமாக இணைந்துள்ளதால் வண்ணத் தரப்படுத்துதல் மூலம் சீரான தரமான படப்பதிவுகளை நாம் இந்த கேமராவின் மூலம் எதிர்பார்க்கலாம்.



சென்னை மாவட்ட சங்கத்தின் சார்பாக மாநில சங்கத்திற்கு பணியாற்றிய முன்னாள் இணைச் செயலாளர் பாலச்சந்தர் அவர்களின் முயற்சியின் காரணமாக, தமிழ்நாடு வீடியோ போட்டோகிராபர் அசோசியேஷனுக்கு பல்வேறு பாடப்பிரிவுகளில் 2019 ஆம் ஆண்டு இலவசசீட் வழங்கப்பட்டன. 2019 ஆண்டில் மட்டும் 19 மாணவ செல்வங்கள் இலவச படிப்பை பயன்படுத்தி கொண்டார்கள். இதில் இரண்டு மாணவர்கள் டிகிரியிலும் மற்றவர்கள் பிஇ பாடப்பிரிவிலும் சேர்ந்து பயின்றார்கள். இவர்களில் பாரதி பிகாம் ஜென்ரல் பிரிவிலும், டில்லி பாபு பிஎஸ்சி கேட்டரிங் பிரிவிலும் 3rd ரேங்க் பிடித்து பட்டம் பெற்ற போது எடுத்த புகைப்படம். இவர்கள் இலவச கல்வி பயில பேருதவி புரிந்த டாக்டர் எம்ஜிஆர் பல்கலைக்கழக பொறுப்பாளர்களுக்கும் நமது மாநில சங்கத்திற்கும், சென்னை மாவட்ட புகைப்படக் கலைஞர்கள் சங்கத்தின் சார்பாக நன்றியை தெரிவித்துக் கொள்கிறோம். படித்து பட்டம் பெற்ற மாணவச் செல்வங்களை வாழ்த்துகிறோம்.




## இந்தோனேசியாவில் நடைபெற்ற கிங் பாக்ஸிங் போட்டியில் ஜெயஸ்ரீ தங்கப்பதக்கம் வென்றார்




செல் செல்வம் தலைமையிலான நிர்வாகம் பொறுப்பேற்றுக் கொண்டவுடன், நமது சங்க உறுப்பினர் குகன் அவர்கள் தனது மகள் ஜெயஸ்ரீக்கு கிக்பாக்சிங் போட்டியில் மிகுந்த ஆர்வம் இருக்கிறது. அவர் இந்தோனேசியாவில் நடைபெறும் உலக கிக்பாக்சிங் போட்டியில் பங்கு பெற உதவி செய்ய வேண்டும் என்று முதல் முறையாக கோரிக்கை வைத்தார். அந்த கோரிக்கையை ஏற்று , நமது சங்க நிர்வாகிகளும், செயற்குழு உறுப்பினர்களும், மாநில சங்க நிர்வாகிகளும், சக நண்பர்களும் ஜெயஸ்ரீ கிக்பாக்சிங் போட்டியில் வென்றுவர பண உதவி செய்தார்கள். இவர்கள் அனைவரின் எண்ணமும் ஈடேறியது போல் தற்போது ஜெயஸ்ரீ கிக்பாக்சிங் போட்டியில் வென்று தங்கமங்கையாக நாடு திரும்பி வருகிறார் என்ற செய்தியை மகிழ்ச்சியுடன் தெரிவித்துக் கொள்கிறோம். வெற்றி பெற்ற ஜெயஸ்ரீக்கு சென்னை வீடியோ மற்றும் புகைப்பட கலைஞர்கள் சங்கத்தின் சார்பாக வாழ்த்துக்களை தெரிவித்துக் கொள்கிறோம்.

**CVPA NEWS** (Tamil & English ) Monthly Newspaper,
**RNI No. TNBIL / 2005 / 15261 (R.Dis no.1834/04)**

Published by **B.SRIDAR,** on behalf of
**Chennai Video & Photographers' Association,**
at 51/24, Bangaru Street, Ellis Road, Chennai-2. Ph: 2860 7821
Email : cvpanews2005@gmail.com, Website : www.cvpa.in
Printed by **M.NAVANEETHAN,** at **Nava Jothi Achagam,**
No.8. Muktharunnissa Begum St, Ellis road, Chennai-2.
Editor : **B.SRIDAR,** Mobile: 8015170351

If undelivered please return to
**Chennai Video & Photographers' Association,**
**at 51/24, Bangaru Street, Ellis Road, Chennai-2. Ph: 28607821**

Postal Registration no TN/ARD/11/2021-2023 WPP License No: TN/PMG/CCR/WPP 557/2021-2023
Posted at Egmore RMS/I (Partika Channel) Posted on 14.12.2022

To